Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 264//2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தங்கராஜ் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 26th June 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர பாளையங்கோட்டையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2017ம் வருடம் பொள்ளாச்சி வட்டார ஆய்வாளராக பணியில் இருந்தபோது, காவல் நிலையக்குற்ற எண்.236/2017 , இதச பிரிவுகள் 279, 304A ன் கீழ் வழக்கு பதிவு செய்து, எனது விசாரணைக்கு வைக்கப்பட்டிருந்ததை நான் 27.11.2017ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் நிலையம் ஆஜரான எதிரி தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டதால் உயர்நீதிமன்ற வழி காட்டுதலின் படி கைதுசெய்து பிணையில் விடுவித்தேன்.

இவ்வழக்கில்சம்பந்தப்பட்ட வாகனங்களை வேண்டுக்கோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். இவ்வழக்கில் விபத்தில் இறந்துபோன நாகராஜ் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் லட்சுமி மற்றும் இறந்துபோன நாகராஜ்க்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பேரானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.

இவ்வழக்கில் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த நாகராஜ் என்பவரின் விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ.7** ஆகவும், அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.9,** மற்றும் **அ.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.